செ.வெ.எண்: 248/2020 நாள்: 11.06.2020

# திருவண்ணாமலை, ஆரணி, திருவத்திபுரம், வந்தவாசி நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ஆய்வு...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (11.06.2020) மாவட்டத்தில் உள்ள நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீதேவி, திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் திரு. வே. நாவேந்திரன், உதவி ஆட்சியர்கள் (பயிற்சி) திரு. ஆனந்த்குமார், இ.ஆ.ப., திரு. அமித்குமார், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மந்தாகிணி உடன் இருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை, ஆரணி, திருவத்திபுரம் (செய்யாறு), வந்தவாசி ஆகிய 4 நகராட்சிகள் உள்ளன. திருவண்ணாமலை நகராட்சியில் உள்ள 39 வார்டுகளில் 1,45,278 மக்கள் தொகையும், ஆரணி நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் 63,263 மக்கள் தொகையும், திருவத்திபுரம் நகராட்சியில் (செய்யாறு) உள்ள 27 வார்டுகளில் 42,304 மக்கள் தொகையும், வந்தவாசி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் 31,317 மக்கள் தொகையும் உள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக நகராட்சி பகுதிகளில் பொது மக்களுக்கு தேவையான அளவு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று விரிவான ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சி பகுதிகளில் சீரான குடிநீர் விநியோம் மேற்கொள்ள வேண்டும் எனவும், மேல்நிலைத் தொட்டிகள், குழாய்கள், தண்ணீர் தொட்டிகள் சுத்தமாக, சுகாதாரமாக பராமரிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

திருவண்ணாமலை நகராட்சியில் 2 நாட்களுக்கு ஒரு முறை 2 மணி நேரம் வீதம் ஒரு நாளைக்கு 17.50 மில்லியன் லிட்டர் தண்ணீர் (17.50 MLD), அதாவது ஒரு நபருக்கு 120 லிட்டர் தண்ணீர் (120 LPCD) விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஆரணி நகராட்சியில் 3 நாட்களுக்கு ஒரு முறை 3 மணி நேரம் வீதம் ஒரு நாளைக்கு 3.86 மில்லியன் லிட்டர் தண்ணீர் (3.86 MLD), அதாவது ஒரு நபருக்கு 61 லிட்டர் தண்ணீர் (61 LPCD), திருவத்திபுரம் (செய்யாறு) நகராட்சியில் 2 நாட்களுக்கு ஒரு முறை 1 மணி நேரம் வீதம் ஒரு நாளைக்கு 2.88 மில்லியன் லிட்டர் தண்ணீர் (2.88 MLD), அதாவது ஒரு நபருக்கு 68 லிட்டர் தண்ணீர் (68 LPCD) மற்றும் வந்தவாசி நகராட்சியில் 4 நாட்களுக்கு ஒரு முறை 1½ மணி நேரம் வீதம் ஒரு நாளைக்கு 1.97 மில்லியன் லிட்டர் தண்ணீர் (1.97 MLD), அதாவது ஒரு நபருக்கு 73 லிட்டர் தண்ணீர் (73 LPCD) விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.